1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் முன்பே வாணியம் பாடியைப் பற்றியும் சொன்னேன். இது பயன்தரும் லாபகரமான தொழிலாக அவர்களுக்கு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளுக்குட்பட்டு வரும் மனுக்கள் உடனடியாகக் காலதாமதமின்றி அனுமதிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினுக்கள்—விடைகள் நேரத்தை நீட்டிக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களால் வழங்கப்பட்ட ஸ்பிரேயர்கள்.

*144 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா ?

உழவர்களுக்கு ஒன்றிய அலுவலகங்களிலிருந்து அளிக்கப்படும் 'ஸ்பிரேயர்கள்' பழுதடைவதை உடனுக்குடன் பழுதுபார்க்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது ஸ்பிரேயர்களைப் பழுதுபார்ப்பதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருபது, இருபத்தைந்து பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. அவை பழுதுபட்டுக் கிடக்கின்றன். அவற்றை உடனுக்குடன் பழுது பார்க்க அங்கங்கே மெக் கானிக்குகள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வேளாண்மைத் துறை அமைச் சராக நான் இருந்தபோது—375 ஊராட்சி ஒன்றியங்களில் பவர் ஸ்ப்ரே யர்கள் இருந்தன 374 ஒன்றியங்களில் மெக்கானிக்குகளும் இருந் தார்கள். மேலும், 374 பேர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, 3 நடமாடும் பழுதுபார்க்கும் கூடங்களும் இயங்கிவருகின்றன. அதைப் போல பக்கத்தில் இருக்கிற சிறுதொழில் பட்டறைகளில் அவற்றைப் பழுது பார்க்கும் பணியும் நடைபெற வசதி செய்யப்பட்டது. நான் மற்றொரு யோசனை கூடச் சொன்னேன், நகரங்களுக்குக் கொண்டுவந்துதான் பழுது பார்க்கவேண்டும் என்கிற நிலை இல்லாது கிராமங்களிலேயே சைக்கிள் ஷாப்புகளில் பழுது பார்க்கத் தேவையான பயிற்சி அங்கங்கே அளிக்கப் பட்டுவிடவேண்டும் என்பதாக. முன்போல இன்றி இப்போது அந்த நிலைமை சீராக இருக்கிறது. மேலும், பழுது பார்க்க உதிரி பாகங்கள் வாங்க 500 ரூபாய் வரை செலவு செய்துகொள்ள அவர்களுக்கே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. முற்பகல் 10·00

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், நீங்கள் கொடுத்திருப்பது போதவில்லையென்றால் அந்தந்த கிராமப்புறங்களிலே தனியார் இப்படிப் பட்ட ஸ்பிரேயர்களைப் பழுதுபார்க்கக் கூடங்கள் ஆரம்பித்தால், அவர் களுக்கு ஒத்தாசை செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 ஆகஸ்ட் 14

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஸ்பிரேயர்களைப் பழுது பார்க்க உதவி செய்யவேண்டுமென்று சைக்கிள் ஷாப் வைத்திருக்கிறவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்கலாம் என்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தனியாக இதற்கென்று ஆட்களைப் பார்க்காமல், இப்பொழுது ஆகாயத்திலிருந்து பூச்சி மருந்து தெளிப்பது நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தாலே, அங்கங்கே ஊராட்சி மன்றங்களிலேயே, படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு, ஸ்பியேரர்களால் தெளிப்பது, அவற்றைப் பழுதுபார்ப்பது ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்து அவர்கள் கிராமங்களுக்கும் 2, 3 ஸ்பிரேயர்களையும் கொடுத்து, அவர்கள் மூலமாகவும் பழுதுபார்ப்பதற்கும் தெளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் வாங்கப்படுகிற ஸ்பிரேயர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறபொழுது அவை மீண்டும் பழுதடைந்துவிடுகின்றன. அவற்றை ரிப்பேர் செய்ய 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மெக்கானிக்ஸ் போன்றவர்களை நியமித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, செஞ்சி வட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த மெக்கானிக்ஸும் கிடையாது. விவசாயிகளுடைய ஸ்பிரேயர்ஸ் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. பூச்சிகளால் விவசாயம் எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களே அறிவார்கள். ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மெக்கானிக்கை, இந்த ஸ்பிரேயர்களை ரிப்பேர் செய்ய, ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மெக்கானிக் என்று நான் சொல்லவில்லை. அங்கிருக்கிற வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மேஸ்திரிக்கும் இதில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர் ஒழுங்காக இந்த வேலையைச் செய்து வருகிறார். பல ஊராட்சி ஒன்றியங்களிலே செய்து இருக்கிறார்கள், நான் பார்த்திருக்கிறேன். விரைவிலே செஞ்சிக்கு வர இருக்கிறேன். அவர் யார் என்பதை உறுப்பினருக்குக் காண்பிக்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: ஸ்பிரேயர் போன்ற கருவிகளைப் பழுது பார்ப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் அக்ரோ—இண்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது? அந்தமாதிரி ஆரம்பித்து வேலை செய்தால் இந்த மாதிரி ரிப்பேர்கள் செய்ய வசதியாக இருக்குமல்லவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்கள் சொல்வது அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் என்று கருதுகிறேன். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனுக்கும், அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷனுக்கும் வேறுபாடு இருக்கிறது. அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் மூலமாக இப்பொழுது சில தொழில்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள்

எடுக்கப்படுகின்றன. அதையும் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனேடு இணைத்து செயலாக்கலாமா என்ற யோசனையையும் கவனிப்பதால் தாமதமாகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, பழுதுபட்ட இந்த தெளிப்பான் கருவிகளைப் பழுதுபார்ப்பதற்காக எத்தனையோ முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லியும்கூட, இன்னும் பல இடங்களிலே பழுதுபட்ட நிலையிலே இக்கருவிகள் இருக்கிற காரணத்தாலே ஒரு யூனியனுக்கு 5 ஸ்பிரேயர்ஸ் என்று சொன்னல், மேலும் 5 ஸ்பிரேயர்களை, ஸ்பேராகக் கொடுப்பதற்கு அத்தகைய ஏற்பாட்டையும் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுதே, அதற்காக வேளாண்மைத் துறை மூலமாக, வாங்கப்பட்டு அதிகமாக ஒவ்வொரு யூனியனுக்கும் 4 அல்லது 5 தூவிகளும்—தெளிப்பான்களும்—கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவைகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே வினியோகம் செய்யப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி இல்லாமல் இருக்குமானல், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானல், அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தெளிப்பான்களை எல்லாம் யாரிடத்தில் நீங்கள் வாங்குகிறீர்கள்? அவர்கள் ஏதாவது காரண்டி பீரியட் கொடுக்கிறார்களா? இத்தனை ஆண்டுக்காலத்திற்குள் ரிப்பேர் ஆனல் நாங்களே ரிப்பேர் செய்து தருகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்களா? அல்லது அப்படி ரிப்பேர் ஆனல் நம் தலையிலேயே கட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, முறையான வகையில், அவைகளுக்கெல்லாம் டெண்டர் கேட்கப்பட்டு, அவை சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழுவில் நான்—அபிஷியல் மெம்பர்களும் இருக்கிறார்கள்—அவர்கள் எல்லாம் பரிசீலனை செய்தபிறகு, வாங்கப்படுகிறது. கூட்டுறவுத்துறைகள் மூலமாக இவை செய்யப்படுகின்றன. அவைகளெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்குப் பிறகுதான் வாங்கப்படுகின்றன. வாங்கப்பட்ட உடனே பழுதுபட்டதாக நாம் பார்க்கவில்லை. பழுதுபட்ட உடனே, அவற்றைச் சரிப்படுத்த எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

Raising of oil plants in Kolli Hills

* 145 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are proposals under the consideration of